2011 செப்டம்பர் 14] [திரு. பி. பழனியப்பன்]

பல்கலைக்கழகங்கள் இருந்தனவோ அவை ஒன்றாக இருந்தன. அந்தப் பொறியியல் கல்லூரிகளுக்கு ஒரு மரியாதை வேண்டும், அவற்றிற்கு ஒரு சிறப்பு வேண்டுமென்ற அடிப்படையிலேதான், மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பொறியியல் கல்லூரிகளைத் தனியாகப் பிரித்து, தமிழகத்திலே இருக்கக்கூடிய 237 பொறியியல் கல்லூரிகளை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைத்து, அதை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்து, ஒரு இணைப்பு வகைப் பல்கலைக்கழகமாக உருவாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்ல; மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அதை உருவாக்குகிறபோது, அன்றைக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகம் என்று சொன்னால், அது உலகளவில் புகழ்பெற்று இருந்தது. பாரம்பரியமிக்க பல்கலைக்கழகமாக இன்றைக்குத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆசிரியர்களின் திறமை, உள்கட்டமைப்பு வசதிகள், பாடத் திட்டங்கள், கற்பித்தல், கற்றல் முறைகள், பயிற்சி முறைகள், தேர்வு முறைகள், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் போன்றவையெல்லாம் உலகத்தரத்திற்கு ஒப்பிட்டிருந்தன. அதோடுமட்டுமல்ல; நூலக வசதிகள், ஆய்வு வசதிகள், நெறிமுறைகள், போன்றவையெல்லாம் நம்முடைய உள்நாட்டு மாணவர்களை மட்டுமல்ல; வெளிநாட்டு மாணவர்களையும் கவர்ந்து ஈர்த்தன. இதனால்தான், எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே U.G.C.-யின் NAAC அந்தஸ்துபெற்ற 5 பல்கலைக்கழகங்களில், சென்னை அண்ணாப் பல்கலைக்கழகமும் ஒன்று என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அற்புதத் திட்டத்தின் காரணமாக, பொருளாதார ரீதியில், மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு, உலகளவில் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. இப்பேர்ப்பட்ட புகழையும், பெருமையும் கொண்டிருந்த அண்ணா பல்கலைக்கழகத்தை சிதறடிக்கிற வகையிலே, 2006 ஆம் ஆண்டு இடையிலே ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு, இதைக் கூறு போட்டு, தன்னுடைய குடும்ப நலனைப்

[திரு. பி. பழனியப்பன்] [2011 செப்டம்பர் 14

பெருக்குவதற்காக, இன்றைக்கு விற்றார்கள். பொன்முடி அவர்கள் உயர் கல்வித் துறையிலே செய்த எத்தனையோ சீர்கேடுகளிலே இதுவும் ஒன்று என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

2006 ஆம் ஆண்டு இந்தப் பல்கலைக்கழகத்தை, திருச்சியிலே ஒரு பல்கலைக்கழகமாகவும், கோயம்புத்தூரிலே ஒரு பல்கலைக்கழகமாகவும் பிரித்தார்கள். அதற்குப் பின்பு, 2007 ஆம் ஆண்டு, திருநெல்வேலியிலே ஒரு பல்கலைக்கழகம் பிரித்தார்கள். 2010-லே சென்னையிலே ஒரு பல்கலைக்கழகமாகவும், மதுரையிலே ஒரு பல்கலைக்கழகமாகவும் பிரித்தார்கள். இப்படிப் பிரித்ததனால் என்ன இலாபம் என்று சொன்னால், எந்தவிதமான இலாபமும் ஏற்படவில்லை. துணைவேந்தர் நியமனத்தால் பொன்முடியின் பைதான் நிரம்பியதே தவிர, கல்வின் தரம் உயரவில்லை என்பதை இங்கே நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி, தி.மு.க ஆட்சியில் பிரிக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தில் ஏகப்பட்ட குளறுபடிகள், முறைகேடுகள், நிருவாகச் சீர்கேடுகள்தான் நடந்தன. அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் என்று அதே பெயரில் பல பல்கலைக்கழகங்கள் இருப்பதால், இது வெளிநாட்டிலே இருக்கக்கூடியவர்களுக்கும், கல்விபெறுவதற்குப் போகிற நேரத்திலும், நம்முடைய பல்கலைக்கழகத்திலே படித்த மாணவர்கள் வெளிநாட்டிலே வேலைக்குப் போகிறபோதும், இந்தச் சொல்லை சொல்கிறபோது அவர்களுக்கு ஏற்படுகிற ஒரு குளறுபடி, திருச்சியைத் தவிர வேறு எங்கேயுமே சரியான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை, தரமான பேராசிரியர்கள் இல்லை, ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லை, ஆசிரியர்கள் வசதி இல்லை, நூலக வசதி இல்லை, இதுபோன்ற வசதிகள் எதுவுமே இல்லை. ஒழுங்கான சமச்சீரான பாடத் திட்டங்கள் இல்லை. ஒரே மாதிரியான தேர்வு முறைகள் இல்லை. மதிப்பிடும் முறைகள் இல்லை. இப்பேர்ப்பட்ட கோளாறுகளின் காரணமாகத்தான், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு இணையான அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம் என்ற அச்சமான சூழ்நிலையும், கிராமப்புறங்களிலே படிக்கிற மாணவர்களுக்கு இன்னலும் இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்தத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமையும் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, சென்ற மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் எண்ணிக்கையை உயர்த்துவோம், தரத்தைக் காப்போம் என்றார்கள். எந்த எண்ணிக்கையை உயர்த்தினார்கள், எந்தத் தரத்தைக் காத்தார்கள் என்பது தெரியவில்லை.

பொன்முடி அவர்களுடைய சூதும், வாதும், சுரண்டலும் உயர் கல்வித் துறையைச் சீரழித்துவிட்டன. மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு அம்மாவைப் பொறுத்தவரையில், அவர்களால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் வேண்டுமானால் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும்கூட, அதை ஆளமுடியாமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தனை கல்லூரிகளாக இருந்தாலும், அவற்றை சீர்திருத்தக்கூடிய அரசாக அம்மா அரசு திகழ்ந்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அண்ணா பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அண்ணா பல்கலைக்கழகங்களை சென்னை பல்கலைக்கழகத்தோடு இணைக்க வேண்டும். உலகத்தில் இன்றைக்கு 8,500 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. சென்னை அண்ணா பல்கலைக்கழகம் அதிலே 200-வது இடத்திற்குள் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே உள்ள அரசுக் கல்லூரிகள் 6-உம், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் 3-உம், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 18-உம், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 493-உம் சேர்த்து 520 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. இந்தப் பொறியியல் கல்லூரிகளையெல்லாம் இன்றைக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டு வந்தால் 5.7 இலட்சம் மாணவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இது இணைக்கப்பட்டிருக்கிறபோது ஒரே சீரான பாடத் திட்டம், கற்றல் முறை, தேர்வு முறை, தேர்வு வெளியிடும் முறை, பயிற்சிகள் எல்லாம் வேறுபாடு இல்லாமல் இருக்கும். அதோடு நவீன கற்பித்தல் முறை அதாவது EDUSAT வழியாக சிறந்த முறையில் குறிப்பாக ஒருவர் தலைசிறந்த பேராசிரியர் நம்முடைய பல்கலைக்கழகத்திலே இருக்கிறார் என்று சொன்னால் அந்த கிராமத்திலே இருக்கக்கூடிய